**நாளிதழ் அறிவிக்கை**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

**தூத்துக்குடி மாவட்டம்**

தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் காலியாக உள்ள 17 பணிப்பார்வையாளர் / இளநிலை வரை தொழில் அலுவலர் பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பணிப்பார்வையாளர் / இளநிலை வரை தொழில் அலுவலர் பணி நியமனத்திற்கு விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள், பணிப்பார்வையாளர் / இளநிலை வரை தொழில் அலுவலர் காலிப்பணியிட விபரம், இன சுழற்சி ஒதுக்கீடு மற்றும் விண்ணப்பப் படிவம் ஆகியவை இம்மாவட்டத்தின் www.thoothukudi.nic.in இணையதளத்தில் இடம்பெற்றுள்ளது. இப்பணியிடத்திற்கான விண்ணப்பங்களை 09.11.2020 தேதி முதல் மேற்படி இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சிப் பிரிவு)-க்கு அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரிலோ அல்லது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சிப்பிரிவு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (வளர்ச்சிப்பிரிவு) இரண்டாம் தளம், கோரம்பள்ளம், தூத்துக்குடி-628101 (தொலைபேசி எண் - 0461-2340579) என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ 08/12/2020 (செவ்வாய்க்கிழமை) அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**தூத்துக்குடி மாவட்டம்.**

# இணையதள அறிவிக்கை

ந.க.எண் வ13/ 22671/2020 நாள் : 09.11.2020

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு**

**தூத்துக்குடி மாவட்டம்**

**அறிவிக்கை (NOTIFICATION)**

**பணிப்பார்வையாளர் / இளநிலை வரை தொழில் அலுவலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்**

தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | : | பணிப்பார்வையாளர் / இளநிலை வரை தொழில் அலுவலர் |
| 2. | பணியின் தன்மை | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை செய்து முடித்தல் மற்றும் இதர அனைத்து திட்ட பணிகளையும் மேற்பார்வையிடுதல். |
| 3. | ஊதியம் | : | **ரூ.35,400 - 1,12,400** என்ற ஊதிய அட்டவணையில், அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன் |
| 4. | வயது | : | 2020 ஜீலை மாதம் 1ம் தேதி அன்று 35 வயதிற்கு மிகாதவராக இருத்தல் வேண்டும். |
| 5. | மொத்த பணியிடங்கள் | : | 17 |

| | | | |
|---|---|---|---|
| 6. | இடஒதுக்கீடு விபரங்கள் | : | General Turn – 2<br>General Turn (Women) – 2<br>General Turn/ (Blindness and Low Vision) – 1<br>BC (Muslim) – 1<br>BC(Other than Muslim) – 3<br>BC(Other than Muslim)(Women) – 1<br>MBC / DC – 3<br>MBC / DC (Women) – 1<br>SC – 2<br>SC (Women) – 1 |
| 7. | கல்வித் தகுதி | : | DIPLOMA IN CIVIL ENGINEERING (கட்டுமான பொறியியலில் பட்டயப்படிப்பு) கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும். இதற்கான கல்வியினை முழு நேர அல்லது பகுதி நேர (Regular / Part Time) படிப்பு முறையில் மட்டுமே பெற்றிருக்க வேண்டும். **தொலைதூர கல்வி முறை (Distance Mode) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.** |
| 8. | விண்ணப்பிக்க கடைசி நாள் | : | 08/12/2020 பிற்பகல் 5.45 மணி வரை |

**நிபந்தனைகள்:-**

1. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, வயது, சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
2. இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.
3. விண்ணப்பப்படிவத்தில் உள்ள விபரங்களை முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
4. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.
7. அரசு விதிகளின்படி இனசுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், உரிய சான்றுகளின் நகல்களுடன், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி பிரிவு)-க்கு அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரிலோ அல்லது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (வளர்ச்சிப்பிரிவு) இரண்டாம் தளம், கோரம்பள்ளம், தூத்துக்குடி-628101 (தொலைபேசி எண் - 0461-2340579) என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ 08.12.2020 (செவ்வாய்க்கிழமை) அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு எழுத்துத் தேர்வு நடைபெறும். தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்த விபரங்கள் அடங்கிய தேர்வு நுழைவுச்சீட்டு (Hall Ticket) தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

பணிப்பார்வையாளர் / இளநிலை வரை தொழில் அலுவலர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் (இரண்டாம் தளம் வளர்ச்சிப்பிரிவு), மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திற்கான www.thoothukudi.nic.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**தூத்துக்குடி மாவட்டம்.**

**விண்ணப்பப் படிவம்**

**தூத்துக்குடி** மாவட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு

பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் பணிக்கான விண்ணப்பம்

(விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 08/12/2020)

* (பொருத்தமான இடத்தில் ✓செய்யவும்)

<table>
<tr><td>1.</td><td>விண்ணப்பதாரர் பெயர்</td><td colspan="2"></td><td rowspan="4">புகைப்படம்<br>(கையொப்பத்துடன்)</td></tr>
<tr><td>2.</td><td>பாலினம்*</td><td colspan="2">ஆண் / பெண் / திருநங்கை</td></tr>
<tr><td>3.</td><td>தந்தை / கணவர் பெயர்</td><td colspan="2"></td></tr>
<tr><td>4.</td><td>பிறந்த தேதி</td><td colspan="2"><table><tr><td>நாள்</td><td>மாதம்</td><td>வருடம்</td></tr><tr><td></td><td></td><td></td></tr></table></td></tr>
<tr><td>5.</td><td>வயது (01.07.2020 தேதி அன்று<br>35 வயதிற்கு மிகாமல்)</td><td colspan="3"></td></tr>
<tr><td>6.</td><td>கல்வித் தகுதி<br>DIPLOMA IN CIVIL ENGINEERING<br>முழு நேர அல்லது பகுதி நேர<br>(Regular / Part Time)</td><td colspan="3"></td></tr>
<tr><td>7.</td><td>நிலையான முகவரி</td><td colspan="3"></td></tr>
<tr><td>8.</td><td>விண்ணப்பதாரரின்<br>தொலைபேசி எண். /<br>கைபேசி எண். மற்றும்<br>மின்னஞ்சல் முகவரி</td><td colspan="3"></td></tr>
<tr><td>9.</td><td>மதம்*</td><td colspan="3">இந்து / முஸ்லீம் / கிறிஸ்தவர் / இதர மதத்தினர்</td></tr>
<tr><td>10.</td><td>இனம்*</td><td colspan="3">பொது/பி.வ/பி.வ.(மு)/மி.பி.வ/ஆ.தி /ஆ.தி (அ)/பழங்குடியினர்</td></tr>
<tr><td>11.</td><td>அரசு பணிகளில் சேர முன்னுரிமை பெற்றவரா? *</td><td colspan="3">ஆம் / இல்லை</td></tr>
<tr><td rowspan="3">12.</td><td rowspan="3">ஆம் எனில் எந்த வகையான முன்னுரிமை? (ஆதாரமாக சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்)*</td><td>முன்னாள் இராணுவத்தினர்</td><td colspan="2"></td></tr>
<tr><td>கலப்புத் திருமணம் செய்தவர்</td><td colspan="2"></td></tr>
<tr><td>மாற்றுத் திறனாளி<br>(மாற்றுத் திளனாளி சதவீதம் மற்றும் அடையாள அட்டை நகல் இணைக்கப்பட வேண்டும்</td><td colspan="2"></td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஆதரவற்ற விதவை / விதவை (உரிய அலுவலரின் சான்று நகல் இணைக்கப்பட வேண்டும் | |
| | | இதர முன்னுரிமையுள்ளவர் (முன்னுரிமையினை தவறாமல் குறிப்பிட வேண்டும்) | |
| 13. | விண்ணப்பிக்கும் ஒதுக்கீடு | | |
| | | | |
| | | | |
| 14. | வேலைவாய்ப்பு பதிவு விபரம் (இருப்பின்) | பதிவு எண். | |
| | | பதிவு நாள் | |
| | | புதுப்பிக்கப்பட வேண்டிய நாள் | |
| 15. | கீழ்க்கண்ட சான்று நகல்களை இணைத்துள்ளேன் | | (பொருத்தமானவற்றை ✓செய்யவும்) |
| அ. | பள்ளிமாற்றுச் சான்றிதழ் | | |
| ஆ. | கல்வித் தகுதிச் சான்று | | |
| இ. | சாதிச் சான்று | | |
| ஈ. | முன்னுரிமைச் சான்று (பொருந்தும் நேர்வில்) | | |

**<u>உறுதிமொழி</u>**

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானவை என உறுதியளிக்கிறேன். இதில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால், தேர்வு குழுவினரால் எடுக்கப்படும் அனைத்து வகையான நடவடிக்கைகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

நாள்:

விண்ணப்பதாரர் கையொப்பம்